# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 116 ★ 27.08.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:116 ★27.08.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# நேபாளத்தில் சிக்கிய தமிழர்களை மீட்க நடவடிக்கை

## முதல்வர் விஜய் தகவல்





'நேபாள பெருவெள்ள பாதிப்பில் காணாமல் போன தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை விரைந்து மீட்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல அரசு உயர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்' என தமிழக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் தமிழர்கள் உள்பட இந்தியர்கள் பலர் காணாமல் போனதாக வரும் செய்திகள் அறிந்து மிகுந்த அதிர்ச்சியும், துயரமும் அடைந்தேன்.

இந்தப் பேரிடரில் காணாமல் போன தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைவிரைந்துமீட்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல அரசு உயர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களுக்கு உதவி தேவைப்படும் நிலையில் அவர்களோ அல்லது தமிழ்நாட்டில் உள்ள அவர்களது உறவினர்களோ தொடர்பு கொள்ள ஏதுவாக அவசர தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் நேபாளத்தில் உள்ள இந்தியத் தூதரகம் ஆகியவற்றின் வாயிலாக, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் குறித்த தகவல்களைப் பெற்று, அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தேவையான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்று தெரிவித்துள்ளார்.


நேபாளத்தில் இன்று காலை 8.30 மணியளவில் ரசுவா மாவட்டத்தில் போட்டே கோசி ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சற்றும் எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட இந்த திடீர் வெள்ளப் பெருக்கில் ஆற்றங்கரையோரத்திலிருந்த பல்வேறு கட்டிடங்கள், வாகனங்கள், ஆற்றின் குறுக்கே இருந்த பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டன. 55 பேர் உயிரிழப்பு என உறுதி செய்யப்பட்ட நிலையில், உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி பலர் உயிரிழந்த நிலையில், 291 வெளிநாட்டவர் உள்பட 384 சுற்றுலாப் பயணிகளைக் காணவில்லை என்று நேபாள சுற்றுலாத் துறை தெரிவித்துள்ளது. இதில் 105 பேர் இந்தியர்கள்.

# பழநி தேவஸ்தானத்துக்கு ஐஏஎஸ் அதிகாரி நியமிக்கப்படுவாரா?

சவால்கள் மற்றும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், கோயில் சொத்துகளை பாதுகாக்கவும் பழநி தேவஸ்தானத்தில் காலியாக உள்ள இணை ஆணையர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அந்தஸ்திலானஅதிகாரியை நியமிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக் கோயிலுக்கு தினமும் தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் அதிக அளவில் பக்தர்கள் வருகின்றனர். தமிழகத்திலேயே அதிக வருமானம் தரக்கூடிய கோயில்களில் பழநி முருகன் கோயில் முக்கிய இடத்தில் உள்ளது. இக்கோயில் கட்டுப்பாட்டில் திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் 55 கோயில்கள் உள்ளன.



இது தவிர பக்தர்கள் தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், மனநலக் காப்பகம், சித்த மருத்துவமனை, 10க்கும் மேற்பட்ட பள்ளிகள், கல்லூரிகள், கோசாலை, கருணை இல்லம், வேதம் மற்றும் நாகஸ்வர பாடசாலைகளும் இயங்கி வருகின்றன. தமிழகம் முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான அசையும் மற்றும்அசையாசொத்துகள் உள்ளன.

இக்கோயிலில் இணை ஆணையராக பணியாற்றி வந்த மாரிமுத்து, ஜூலை 10ம் தேதி கூடுதல் ஆணையராக பதவி உயர்வு பெற்று சென்னை சென்றார்.

தொடர்ந்து, துணை ஆணையர் வெங்கடேஷ் முழு கூடுதல் பொறுப்பாக இணை ஆணையராக செயல்பட்டு வருகிறார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு இக்கோயிலில் உதவி ஆணையராக (நிர்வாகம்) இருந்த லட்சுமி, துணை ஆணையராக பதவி உயர்வு பெற்று, வடபழனி முருகன் கோயிலுக்கு சென்றார்.

பின்னர், உதவி ஆணையர் (கோயில்) செந்தில்குமார் கூடுதல் பொறுப்பாக நிர்வாகத்தையும் கவனித்து வந்தார். அவரும் கடந்த ஜூலை 31ம் தேதி பணி ஓய்வு பெற்றார்.

தற்போது இணை ஆணையர், உதவி ஆணையர் பணியிடங்கள் காலியாக இருப்பதால் அனைத்து பணிகளையும் பொறுப்பு இணை ஆணையரே கவனிக்க வேண்டிய நிலை உள்ளது.

பதவிக்கு வர தயக்கம்

இதன் காரணமாக, கோயில் மட்டுமின்றி அனைத்து நிர்வாகப் பணிகளும் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. பழநியில் உள்ள தண்டபாணி சுவாமிகள் மடத்துக்கு சொந்தமான ரூ.100 கோடி நிலப்பதிவு முறைகேடு பிரச்சினை பெரியதாக பேசப்படும் முன்பு வரை, பழநி தே வஸ்தானத்தில் காலியாக இருக்கும் இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்கள் பதவிக்கு அறநிலையத்துறை அதிகாரிகளிடையே கடும் போட்டி நிலவியது.

தற்போது ரூ.100 கோடி நில மோசடி விவகாரத்துக்கு பிறகு இணை ஆணையர், உதவி ஆணையர் பதவிக்கு வர அறநிலையத்துறை அதிகாரிகள் தயக்கம்காட்டிவருகின்றனர். ஆயிரக்கணக்கான பக்தர்களை சமாளிப்பது, பக்தர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துவது, கோயில் சொத்துகளை பாதுகாப்பது என தினமும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வது தேவஸ்தான நிர்வாகத்துக்கு சவாலாக இருந்து வருகிறது.

பிரச்சினைகளை கையாண்டது, பக்தர்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பது, ஆக்கிரமிப்பில் இருந்த கோயில் சொத்துகளை மீட்டதில் முன்பிருந்த இணை ஆணையர் மாரிமுத்து சிறப்பாக பணியாற்றினார். அவரை போன்று இல்லாவிட்டாலும் தினமும் நேரும் சவால்களை சமாளிக்கும் திறன், தலைமை பண்பு கொண்ட ஒருவரை இணை ஆணையராக நியமிக்கும் எண்ணத்தில் அறநிலையத்துறை உள்ளது.

அதே நேரம், இங்குள்ள சவால்கள் மற்றும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், கோயில் சொத்துகளை பாதுகாக்கவும் ஐ.ஏ.எஸ். அந்தஸ்திலான அதிகாரிகளால் மட்டுமே இயலும். எனவே, இணை ஆணையர் பதவிக்கு மீண்டும் ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்க வேண்டும். மேலும், காலியாக உள்ள உதவி ஆணையர்கள் பணியிடங்களையும் உடனே நிரப்ப வேண்டும் என்று பக்தர்களிடையேஎதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இதற்கு முன்பு ஐ.ஏ.ஏஸ். அந்தஸ்திலான அதிகாரிகளான ஜெயசந்திர பானு ரெட்டி (2019), கிராந்திகுமார்பாடி (2020) ஆகியோர் இணை ஆணையர்களாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

# உசிலம்பட்டி தவெக எம்எல்ஏவுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு

மதுரை உசிலம்பட்டி எம்எல்ஏ விஜய்க்கு அச்சுறுத்தல் காரணமாக துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

உசிலம்பட்டி தொகுதி தவெக எம்எல்ஏவாக இருப்பவர் ம.விஜய். பொது இடங்களுக்கு மக்களை சந்திக்க செல்லும்போது, தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. இதற்காக துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கவேண்டும் என சில தினத்திற்கு முன்பு மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தேவநாதனிடம் அவர் மனு ஒன்றை கொடுத்தார்.



இதைத் தொடர்ந்து விஜயின் எம்எல்ஏ பாதுகாப்புக்கென துப்பாக்கி ஏந்திய இரண்டு காவலர்கள் நியமிக்கப்ப ட்டுள்ளனர். இவர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் எம்எல்ஏவின் பாதுகாப்பு பணியை உசிலம்பட்டியில் தொடங்கினர். கடந்த 2 நாட்களுக்கு முன்பு சட்டப்பேரவையில் முதன் முறையாக விஜய் எம்எல்ஏ பேசியபோது, அவருக்கு ஓரிரு அரசியல் கட்சி தரப்பில் இருந்து எதிர்ப்பு கிளம்பிய நிலையிலும் அவருக்கு இந்த போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## திருச்சியில்

# ரூ.1.20 லட்சம் ஆன்லைன் மோசடி

திருச்சியில் ஆன்லைன் மூலம் ரூ.1.20 லட்சம் மோசடி செய்த சம்பவம் குறித்து சைபர் கிரைம் போலீசார் விசாரித்து வருகின்றனர். திருச்சி கிராப்பட்டி பாரதி நகரைச் சேர்ந்தவர் அப்துல்ரஹீம் (31). இவரிடம் ஆக.19ம் தேதி மர்ம நபர் ஒருவர், செல்போனில் தொடர்பு கொண்டு தனியார் வங்கியிலிருந்து பேசுவதாகக் கூறினார். பின்னர் உங்களது முடக்கப்பட்ட கிரெடிட் கார்டை மீண்டும் புதுப்பித்து தருவதாக கூறி ஒரு லிங்க் அனுப்பி உள்ளார். அதனை நம்பிய அப்துல்ரஹீம், மர்ம நபர் அனுப்பிய லிங்க் மூலம் ஒரு ஆப் பதிவிறக்கம் செய்து தனது கிரெடிட் கார்டு விவரங்களை பதிவேற்றியுள்ளார். சில நிமிடங்களில் அவரது கணக்கிலிருந்து ரூ.1.20 பணம் எடுக்கப்பட்டதாக எஸ்எம்எஸ் வந்தது. இதுகுறித்த புகாரின் பேரில் சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# மேட்டூர் அணையில் இருந்து ஆக.28ல் தண்ணீர் திறக்கிறார் முதல்வர் விஜய்

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நாளை மறுநாள் (ஆக.28) முதல்வர் விஜய் தண்ணீர் திறந்து வைக்கும் நிலையில், சேலம் மாவட்ட ஆட்சியர்இளம்பகவத், மேற்கு மண்டல ஐஜி ரம்யா பாரதி ஆகியோர் மேட்டூர் அணையை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்கப்படும். நடப்பாண்டில் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால் தண்ணீர் திறக்கப்படவில்லை.

இரண்டு மாதங்களைக் கடந்துவிட்ட நிலையில், காவிரி டெல்டா பாசனத்துக்கு தமிழக முதல்வர் விஜய் நாளை மறுநாள் (ஆக.28) மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து வைக்கவுள்ளார்.

இதனிடையே, அணை திறப்புக்கான முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளை மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனையொட்டி, மேட்டூர் அணையின் வலது கரையில் விழா மேடை அமைக்கப்பட உள்ள இடம், மேல் மட்ட மதகில் மின் விசையை இயக்கும் இடம், அணை பூங்கா உள்ளிட்ட இடங்களில் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் மற்றும் மேற்கு மண்டல ஐஜி ரம்யா பாரதி தலைமையில் சரக டிஐஜி சந்தோஷ் ஹடிமணி, எஸ்பி குத்தாலிங்கம் ஆகியோர் இன்று ஆய்வு செய்தனர்.

மேலும், முதல்வரின் பாதுகாப்பு பிரிவு போலீஸாரும் அணையின் வலதுகரை, இடது கரை, 16 கண் மதகு, நிகழ்ச்சி நடக்கும் இடம் உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இதனையொட்டி, மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதற்கான பணிகளில் நீர்வளத்துறை அதிகாரிகள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

மேட்டூர் அணையில் வர்ணம் தீட்டும் பணிகளும், மேல்மட்ட மதகு பகுதியில் மதகுகளின் இயக்கங்களும் சரிபார்க்கப்பட்டு வருகிறது.

மேலும், அணையில் இருந்து தண்ணீர் செல்லும் பகுதிகளில் உள்ள புற்கள், கழிவுகள் உள்ளிட்டவை அகற்றும் பணியும் நடந்து வருகிறது.

மேட்டூர் பகுதியில் சாலையோரம் உள்ள புற்கள் அகற்றும் பணி, சாலையின் நடுவே உள்ள தடுப்பு சுவர்கள் உள்ளிட்டவை புதுப்பிக்கும் பணியும் தீவிரமாக நடந்து வருகிறது.

தடுப்புசுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்கள் அகற்றும் பணியும் நடந்து வருகிறது.

# திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 புதிய பேருந்துகள் இயக்கம்

## போளூரில் ஆட்சியர் வந்தனா கார்க் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

பொதுமக்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடுஅரசுபோக்குவரத்துக் கழகம் சார்பில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 புதிய பேருந்துகளின் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இதன் தொடக்க விழா போளூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.



மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கலந்து கொண்டு புதிய பேருந்துகளை கொடியசைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். அபிஷேக் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் 25.08.2026 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முழுவதும் அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 250 புதிய பேருந்துகளின்சேவையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 புதிய பேருந்துகள்இயக்கிவைக்கப்பட்டுள்ளன.

6 புதிய பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடங்கள்

பொதுமக்களின் போக்குவரத்து தேவையை கருத்தில் கொண்டு, கீழ்க்கண்ட 6 வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன:

ஆரணி – போளூர் – வடமாதிமங்கலம், கரிக்காத்தூர் வழியாக

ஆரணி – பூசிமலைக்குப்பம் – மெய்யூர், அடையபுலம் வழியாக

செய்யாறு – ஆவணியாபுரம் – பாராசூர், கொருக்கை வழியாக

திருவண்ணாமலை – பொன்னாங்குளம் – கடம்பை, கீழ்பென்னாத்தூர் வழியாக

திருவண்ணாமலை – செல்லாங்குப்பம் – மாத்தூர், கொளக்குடி வழியாக

திருவண்ணாமலை – குப்பந்தாங்கல் – செட்டிப்பட்டு, தண்டராம்பட்டு வழியாக

இந்த புதிய பேருந்துகள் மூலம் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களுக்கு இடையேயான போக்குவரத்து இணைப்பு மேலும் மேம்படுவதுடன், மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயனடைவார்கள் என தெரிவிக்கப்பட்டது. மேலும், புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பாதுகாப்பான, வசதியான மற்றும் தடையற்ற பயணத்தை மேற்கொள்ளும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், துணை மேலாளர் (வணிகம்) கலைச்செல்வன், கிளை மேலாளர் (வணிகம்) ராமு, உதவி மேலாளர் (வணிகம்) சரவணன் மற்றும் போக்குவரத்துத்துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# 7.5% உள் ஒதுக்கீட்டில் நீட் தேர்வில் வெற்றி

## மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்ற செய்யாறு மாணவிக்கு எம்.எல்.ஏ. வாழ்த்து

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாட்டேரி கிராமத்தைச் சேர்ந்த மாணவி தமிழ்ச்செல்வி, செய்யாறு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பயின்று, 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டின் மூலம் நீட் தேர்வில் வெற்றி பெற்று மருத்துவப் படிப்பில் சேர இடம் பெற்றுள்ளார்.



கடலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பு பயில இடம் கிடைத்துள்ள மாணவி தமிழ்ச்செல்வி, செய்யாறு சட்டமன்ற அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் முக்கூர் என். சுப்பிரமணியனை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

அப்போது மாணவி தமிழ்ச்செல்வி கூறுகையில், அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டின் காரணமாகவே தனக்கு மருத்துவப் படிப்பில் சேரும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும், இந்த வாய்ப்பை பயன்படுத்தி சிறப்பாக கல்வி பயின்று மருத்துவராக வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்தார்.

இதையடுத்து மாணவியைப் பாராட்டிய சட்டமன்ற உறுப்பினர் முக்கூர் என். சுப்பிரமணியன், மருத்துவப் படிப்பில் சிறப்பாக பயின்று, எதிர்காலத்தில் சிறந்த மருத்துவராக உருவாகி, பொதுமக்களுக்கு அர்ப்பணிப்புடன் மருத்துவ சேவையாற்ற வேண்டும் என வாழ்த்தினார்.

மேலும், அரசுப் பள்ளியில் பயின்று மருத்துவக் கல்வியில் சேரும் வாய்ப்பை பெற்றுள்ள மாணவி தமிழ்ச்செல்வியின் சாதனை, அவரது குடும்பத்தினருக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும், நாட்டேரி கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நகரச் செயலாளர் வெங்கடேசன், ஒன்றியச் செயலாளர்கள் அரங்கநாதன், சி. துரை, பையூர் சிவராஜ், வயலூர் ராமநாதன் மற்றும் செந்தில், ராஜேஷ்குமார், பொன்னுரங்கம், பாபு, துபாய் ரவி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மாணவிக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சட்ட ஒழுங்கு, சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு ஆய்வு கூட்டம்




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்கு கூட்டரங்கில் சட்ட ஒழுங்கு, சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு ஆய்வு கூட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், போதை பொருட்கள் தடுப்பு, மணல் குவாரிகள், தீயணைப்பு துறை ஆகியவை தொடர்பான மாவட்ட அளவிலான பல்துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கவிதா தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வி.வி.சாய் பிரணித், பொன்னேரி சார் ஆட்சியர் அப்துல் ராசிக், உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.பவித்ரா, திருத்தணி உதவி காவல் கண்காணிப்பாளர் சுபம் திமன், காவல் துணை ஆணையர்கள் வினோத் சாந்தாராம், (சட்டம் ஒழுங்கு (ஆவடி), செங்குன்றம் போக்குவரத்து காவல் மாவட்ட துணை ஆணையர் சங்கு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், வருவாய் கோட்டாட்சியர்கள் ரவிச்சந்திரன் (திருவள்ளூர்), ராஜகோபால் (திருத்தணி) மற்றும் பல்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.





### தவெக சார்பில் மிலாடி நபியை முன்னிட்டு

# வல்லநாடு மியான் மியான் பள்ளி தர்ஹாவில் கருங்குளம்

## வடக்குஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன் அனைவருக்கும் கேக் வழங்கினார்


தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆணைக்கேற்ப தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளரும் தமிழ்நாடு சிறு குறு தொழில் துறை அமைச்சருமான மதன் ராஜா வழிகாட்டுதலின்படி கருங்குளம் வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட வல்லநாடு மியான் மியான் பள்ளி தர்ஹாவில் நடந்த மிலாடிநபிவிழாவில் தவெக ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன்முஸ்லீம் சமுதாய மக்களுக்கு கேக் வழங்கி. முகம்மது நபிகள்நாயகம் பிறந்த நாள் விழாவை மகிழ்ச்சியுடன் தவெகவினர் கொண்டாடினர்

இந்நிகழ்ச்சியில் தவெகஒன்றிய இணைச் செயலாளர் மாரியப்பன் ,தஞ்சாவூர் சாதிக்பாய், மற்றும் ஹஜரத் லியாகத் அலி, பள்ளி தர்ஹா நிர்வாகத்தினர்கள் மற்றும் தவெக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அணி அமைப்பாளர் மெர்சல்மணி,,பொருளாளர் முத்துகுமார்,.ஒன்றிய துணைச்செயலாளர் சிவசண்முகம், வல்லநாடு கணேஷ்,ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் பாக்கியலட்சுமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அங்கப்பன்,ஒன்றிய இளம் பெண்கள் அணி அமைப்பாளர் கவிதா,மாவட்ட இளம்பெண்கள் அணி இணையமைப்பாளர் கோமதிசெல்வி, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் வெங்கடேஷ் வல்லநாடுதவெக கிளைச்செயலாளர் பிர்தௌஸ் சுப்புலட்சுமி, மற்றும் ஒன்றிய கழக மற்றும் கிளை நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டதுடன் வல்லநாடு பகுதி பொது மக்களுக்கு மிலாடி நபி விழாவை முன்னிட்டு கேக் இனிப்பு வழங்கினர்

### உள்ளூர் மக்களை முடக்கும் காவல்துறை:

# திருவண்ணாமலை ராஜகோபுரத்தில் பேரிகார்டு கெடுபிடியால் கொதிக்கும் பொதுமக்கள்

திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயில் ராஜகோபுரம் அருகே பக்தர்கள் கற்பூரம் ஏற்றி வழிபடுவதாகக் கூறி, சாலையின் பெரும் பகுதியை பேரிகார்டுகள் கொண்டு அடைத்துள்ள காவல்துறையின் அதிரடி நடவடிக்கைக்கு உள்ளூர் வீதியை விட்டு இறங்கவே முடியாத அளவுக்கு இந்த பேரிகார்டு கெடுபிடி அமைந்துள்ளதாகப் புலம்புகின்றனர். வணிகர்களின் வியாபாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையும் கேள்விக்




மக்களும் வியாபாரிகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். 'பக்தர்கள் பாதுகாப்பு' என்ற பெயரில் ஒட்டுமொத்தப் பகுதியையும் முடக்கி வைத்திருப்பதாக அப்பகுதி மக்கள் கொதித்தெழுந்துள்ளனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உதயகுமார் கடந்த 25ஆம் தேதி இரவு மேற்கொண்ட ஆய்வைத் தொடர்ந்து, போக்குவரத்து காவல்துறையினர் ராஜகோபுரம் முன்புள்ள பிரதான சாலையை பேரிகார்டுகளால் அடைத்து வாகனப் போக்குவரத்தை தலைகீழாக மாற்றியமைத்துள்ளனர். இதனால், மிகக் குறுகிய பாதையில் மட்டுமே வாகனங்கள் செல்ல முடிந்து, அப்பகுதியே ஸ்தம்பித்துப்போய் உள்ளது.

ஏற்கெனவே அண்ணாமலையார் கோயிலில் உள்ளூர் பக்தர்கள் நிம்மதியாக சாமி தரிசனம் செய்ய முடியாமல் தவித்து வரும் நிலையில், தற்போது குறியாகியுள்ளது. "பக்தர்களுக்கு வசதி செய்து தருவது நல்லது தான், அதற்காக உள்ளூர் வாசிகளின் வயிற்றிலா அடிப்பது?" எனச் சமூக ஆர்வலர்கள் காட்டமாகக் கேள்வி எழுப்புகின்றனர். பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் அன்றாட வாழ்க்கையைப் பலிகொடுத்துதான் பாதுகாப்பு அளிக்க வேண்டுமா என்பதே அனைவரின் ஆதங்கமாக உள்ளது. எனவே, பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு நின்றுவிடாமல், உள்ளூர்வாசிகளின் வாழ்வாதாரத்தையும் போக்குவரத்தையும் முடக்கும் இந்தத் தலைகீழ் மாற்றங்களை உடனடியாகக் காவல்துறை திரும்பப் பெற வேண்டும் என்றும், இந்த அநியாயக் கெடுபிடியை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் மிகக் காட்டமாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ்நாடு அரசின் 5வது ஆண்டு சுற்றுலா விருதுகள் - 2026 பெற தகுதியுள்ள சுற்றுலா தொழில் முனைவோர்கள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார்

தமிழ்நாடு அரசின் 5வது ஆண்டுசுற்றுலாவிருதுகள் – 2026 பெற தகுதியுள்ள சுற்றுலா தொழில் முனைவோர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையால், சுற்றுலாத் தொழிலை ஊக்குவிப்பதற்காக சுற்றுலா தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அதன்படி, இவ்வாண்டும் சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுற்றுலா தொழில் முனைவோர்களுக்கு வகைப்பிரிவுகளின் கீழ் 31 விருதுகள் வழங்கப்பட உள்ளது.

விருதுகளின் பட்டியல் 13

தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த பயணபங்குதாரர், சிறந்த தங்குமிடம், சிறந்த உணவகம், சுற்றுலா ஊக்குவிப்பதற்கான சிறந்த மாவட்டம் சுத்தமான சுற்றுலாத்தலம், பல்வேறு சுற்றுலாப்பிரிவுகளின் சிறந்த ஏற்பாட்டாளர் சிறந்த சிறப்பு சுற்றுலா நிறுவனம் சிறந்த மருத்துவ மற்றும் ஆரோக்கிய சுற்றுலா நிறுவனம் சிறந்த சாகச மற்றும் தங்கும் முகாம்களுக்கான சுற்றுலா ஏற்பாட்டாளர்,

சிறந்த சுற்றுலா வழிகாட்டி. சுற்றுலா மற்றும் விருந்தோம்பலில் சிறந்த கல்வி நிறுவனம் ஆகிய தகுதிகள் உள்ளவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்கலாம்.



மேலும், 2026 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சுற்றுலா விருது பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் http://www.tntourlamawards.com என்ற இணையதள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து 30.09.2026க்குள் தேவையான சான்றிதழ்களுடன் பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விண்ணப்பங்கள் தேர்வுக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு தேர்வு செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது மேலும் கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட சுற்றுலா அலுவலர், சுற்றுலா

அலுவலகம், வேலூர் கோட்டை. வேலூர். தொலைபேசி எண்கள் 180042531111.

9444823111 ,9994872734 மற்றும் 8939896396 மின்னஞ்சல் முகவரி tntourtsmewerde@gmal.com மூலமாக தொடர்புகொள்ளலாம். எனவே, இராணிப்பேட்டை மாவட்ட சுற்றுலாத் தொழில் முனைவோர் அனைவரும் தமிழ்நாடு சுற்றுலா விருதுக்கான விண்ணப்பங்களை விரைந்து இணையத்தளத்தில் பதிவு செய்து பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், தெரிவித்துள்ளார்.

# பாணாவரம் அருகே நாட்டு வெடிகுண்டு பட்டாகத்தியுடன் காரில் சுற்றித்திரிந்த 4 பேர் கைது கார் பறிமுதல்

ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிபின் உத்தரவின்பேரில் அரக்கோணம் துணை வட்ட துணை காவல் கண்காணிப்பாளர் பொண்ணுசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி காவல்துறையினர் தொடர் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ராணிப்பேட்டை மாவட்டம் பாணாவரம் காவல்நிலைய ஆய்வாளர் நாகேந்திரன் தலைமையில் உதவி ஆய்வாளர் ரகு மற்றும் காவலர்கள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாணாவரம் அருகே பிள்ளையார் குப்பம் கூட்டு சாலை பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்துள்ளனர். அப்போது வேகமாக வந்த காரை மடக்கியுள்ளனர். இதில் காரில் வந்தவர்கள் முன்னுக்கு பின் முரணாகவும் காவலர்களை மிரட்டும் தோனியில் பேசியதாகவும் கூறப்படுகிறது. இதனால் சந்தேகம் அடைந்த காவல் துறையினர் காவல் நிலையம் அழைத்து வந்து தீவிர விசாரனை செய்தனர்.

விசாரணையில் சோளிங்கர் தாலுக்கா அலித்தாங்கல் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த பொன்னுரங்கம் என்பவரின் மகன் சஞ்சய்குமார் (22), சோளிங்கர் அடுத்த வெங்குப்பட்டு எம்ஜிஆர்நகரை சேர்ந்த பாபு என்பவரின் மகன்ரஞ்சித்(22), சோளிங்கர் கருமாரியம்மன் கோவில் கூட்டுச்சாலை சந்திப்பு காமராஜர் நகர் பகுதியை சேர்ந்த வெங்கடேசன் என்பவரின் மகன் மணி(19) வாலாஜா பேட்டை தாலுக்கா வேலம் கே.கே நகர் பகுதியைசேர்ந்தசுரேஷ்குமார் என்பவரின் மகன் குமரன் (20) என்பதும் தெரியவந்தது.




இதில் சஞ்சய்குமார்(22) மீது திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி, கணகம் மாசத்திரம், பொதட்டூர் பேட்டை உள்ளிட்ட காவல் நிலையங்களில் பல்வேறு குற்றவழக்குகளும், ரஞ்சித் (22) மீது சோளிங்கர் காவல் நிலையத்தில் குற்றவழக்குகள் உள்ளது என காவல்துறையினர் விசாரணையில் தெரிய வந்ததாக கூறப்படுகிறது. தொடர்ந்து அவர்கள் வந்த காரை சோதனை செய்த போது காரில் மறைத்து வைத்திருந்த. இரண்டு பட்டாகத்திகள், மூன்று நாட்டு வெடிகுண்டுகள் இருப்பதை கண்டறிந்தனர். அதனையும் அவர்கள் ஓட்டிவந்த காரையும் பறிமுதல் செய்தனர்.

இதனை தொடர்ந்து நான்கு பேரும் ஏதாவது குற்றசெயலில் ஈடுபட வந்தனரா அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என தீவிர விசாரனை மேற்கொண்டனர். மேலும் போலீசார் நான்கு பேர் மீது வழக்கு பதிவு செய்து அவர்களை சோளிங்கர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.



நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சச்சிதானந்தம் அவர்கள் தலைமையில் பழனி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்த 17 துப்புரவு பணியாளர்களை பணி நீக்கத்தை ரத்து செய்ய வலியுறுத்தியும் மீண்டும் அவர்களை பணியில் அமர்த்த வலியுறுத்தியும் CITU சார்பில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது

# கொடைக்கானலில் ஜீப்பில் ஆபத்தான சாகசப் பயணம்

## ஒருவர் கைது; கார் பறிமுதல்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கீழ்பூமி பள்ளங்கிபகுதியில்திறந்த ஜீப்பில் வாகனத்தின் இரு புறங்களிலும் தொங்கிய படி ஆபத்தான முறையில் சாகசப் பயணம் மேற் கொண்ட வீடியோ சமூக வலைதளங்களில் வைர லானது.

இதையடுத்து, காவல் கண்காணிப்பாளர் S. ஜெயக்குமார், இ.கா.ப., உத்தரவின்பேரில், காவல் துணைக் கண்காணிப்பா ளர் காயத்திரி மேற்பார்வையில், ஆய் வாளர் புகழேந்தி தலை மையிலான போலீசார் சிசி டிவி காட்சிகள் மற்றும் சமூக வலைதள வீடி யோவை ஆய்வு செய்து விசாரணை நடத்தி னர்.

இதில், கொடைக்கா னல் ஆனந்தகிரி பகுதி



யைச் சேர்ந்த முகமது வாசிம் (வயது குறிப்பிடப்பட வில்லை) தனது நண்பர்களுடன் ஆபத்தான சாகசப் பயணத்தில் ஈடு பட்டது தெரியவந்தது.

இதையடுத்து இன்று (26.08.2026) முகமது வாசிம் கைது செய்யப்பட்டதுடன்,

சம்பவத்திற்கு பயன்ப டுத்தப்பட்ட கார் பறிமு தல் செய்யப்பட்டது.

மேலும், இதில் தொடர் புடைய மற்ற நபர்கள் குறித்தும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். எச்சரிக்கை: க்ஷபொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் வாகனங்க ளில் சாகசப் பயணம் மேற்கொண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்ப டும் என காவல்துறை எச்சரிக்கைவிடுத்துள்ளது.



# செங்குன்றம் ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் உத்திராட ஓணம் திரு பூஜை விழா

மாதவரம் தொகுதி செங்குன்ற (நாரவாரிக் குப்பம்) பேரூராட்சியில் பிரசித்தி பெற்ற ஹரிஹர சுத ஸ்ரீ ஐயப்பன் ஆலயத் தில் ஸ்ரீ ஐயப்பன் சேவா சங்கம் சார்பில் உத்திராட ஓணம் திரு பூஜை விழா ஆலய நிர்வாகிகள் தலைமை குருசாமி வாசு மற்றும்தலைவர்தேவன், பொது செயலாளர் ராதா கிருஷ்ணன், பொருளா ளர்ரமேஷ்பாபு, துணைத் தலைவர் உண்ணிகிருஷ்ணன், செயலாளர்கள் பாலாஜி, சஜிவ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் ஏற்பாட் டில்சிறப்பாகநடைபெற் றது.

நிகழ்ச்சியில் ஸ்ரீ கண பதிபூஜையுடன், கணபதி ஹோமம், கலசபூஜை, கலச அபிஷேகம், உச்சி காலபூஜை மற்றும் உற்ச வருக்கு உத்திராட ஓணம் சத்யா படைக்கப்பட் டது.மாலையில் , ஆலய குத்துவிளக்கு ஏற்றப் பட்டு சுவாமிக்கு மஹா தீபாராதனை போன் றவை நடைபெற்றது.

இதில் சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிரா மபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்ச னைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடி வில் கேரள பாரம்பரிய முறைப்படி அனைவருக் கும் உத்திராட ஓணம் சத்யா அறுசுவை அன்ன தானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.

# டி.கே. ஹள்ளி மக்களுக்கு லயன்ஸ் சுரேஷ் அவர்களின் இதயம் கனிந்த ஓணம் திருநாள் நல்வாழ்த்துகள்

பங்காருபேட்டை தாலுகாவிற்குட் பட்ட டி.கே. ஹள்ளி பஞ்சாயத்து பகுதி மக்களுக்கு, முன்னாள் பஞ்சாயத்து தலை வரும், லயன்ஸ் திரு. சுரேஷ் அவர்களும் தனது இதயம் கனிந்த ஓணம் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

"என் அன்பிற்கினிய டி.கே. ஹள்ளி பஞ்சாயத்து பகுதி மக்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக் கங்களும், இதயம் கனிந்த ஓணம் திரு நாள் நல்வாழ்த்துகளும்.

மகிழ்ச்சி, அன்பு, ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் சிறப்புமிக்க திருநாளாக ஓணம் திருநாள் கொண்டாடப்படுகிறது. இந்த இனிய திருநாளை டி.கே. ஹள்ளி மக்கள் அனை வரும் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வும், பாதுகாப்பாகவும் கொண்டாட வேண்டும் என்பதே எனது அன்பான வேண்டுகோள்.

ஓணம் என்றாலே நம் நினைவிற்கு வரு வது அன்பும், சகோதரத்துவமும், ஒற்று மையும் தான். பெரியவர்கள் முதல் சிறிய வர்கள் வரை அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடும் இந்த திருநாள், நம் வாழ்க் கையில் புதிய நம்பிக்கையையும் மகிழ்ச் சியையும் கொண்டு வரட்டும்.

டி.கே. ஹள்ளி பஞ்சாயத்து பகுதி மக் கள் அனைவரும் எந்தவிதமான வேறுபா டுகளும் இல்லாமல் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். ஒருவருக்கொருவர் உத வியாகவும், அன்பாகவும் இருந்து நமது பகுதியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்தி ற்கும் துணை நிற்க வேண்டும்.

இந்த ஓணம் திருநாளில் ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சி நிறைந்திருக்கட்டும். குழந்தைகளின் கல்வி சிறக்கட்டும். இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலம் அமையட்டும். பெண் களின் வாழ்க்கையில் முன்னேற்றமும், பாதுகாப்பும் கிடைக்கட்டும். பெரியவர் கள் அனைவரும் நல்ல ஆரோக்கியத்து டன் நீண்ட காலம் வாழட்டும்.

விவசாயிகள் தங்கள் உழைப்பில் நல்ல பலனைப் பெற வேண்டும். தொழிலாளர் கள், வியாபாரிகள் என அனைத்து தரப்பு மக்களும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும். ஒவ் வொரு குடும்பத்தின் வாழ்க்கையிலும் வளமும், அமைதியும், நிம்மதியும் பெருக வேண்டும்.

முன்னாள் பஞ்சாயத்து தலைவராக டி.கே. ஹள்ளி பகுதி மக்களுடன் நான் கொண்டிருக்கும் அன்பும், பாசமும் என் றும் தொடரும். பொதுமக்களின் நலனே எனக்கு முதன்மையானது. மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அறிந்து, அவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை தொடர்ந்து செய்வேன். நமது டி.கே. ஹள்ளி பகுதி மேலும் வளர்ச்சி பெற வேண்டும். சாலை, குடி நீர், மின்சாரம், சுகாதாரம், கல்வி உள் ளிட்ட அடிப்படை வசதிகள் சிறப்பாக அமைய வேண்டும். நமது பஞ்சாயத்து பகுதி மக்கள் அனைவரும் வளமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதே எனது மனமார்ந்த விருப்பம்.



இந்த ஓணம் திருநாள் நம் அனைவருக் கும் புதிய தொடக்கமாக அமையட்டும். குடும்பங்களில் மகிழ்ச்சி மலரட்டும். இல்லங்களில் அமைதி நிலவட்டும். ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் வெற்றி, வளம், நம்பிக்கை ஆகியவை பெருகட்டும்.

பங்காருபேட்டை தாலுகாவிற்குட் பட்ட டி.கே. ஹள்ளி பஞ்சாயத்து பகுதி மக்கள் அனைவருக்கும், எனது குடும்பத் தினர் சார்பாகவும், எனது சார்பாகவும் மீண்டும் ஒருமுறை இதயம் கனிந்த ஓணம் திருநாள் நல்வாழ்த்துகளை தெரி வித்துக் கொள்கிறேன்.

அன்பும் ஒற்றுமையும் நிறைந்த ஓணம் திருநாளாக அமையட்டும்! அனைவருக்கும் இனிய ஓணம் நல்வாழ்த் துகள்!

என்றும் மக்கள் நலனில்,
லயன்ஸ் திரு. சுரேஷ்
முன்னாள் தலைவர், டி.கே. ஹள்ளி பஞ் சாயத்துபங்காருபேட்டை தாலுகா

# மதுரையில் தமிழ்நாடு வாழ் மலையாளிகள் விமரிசையாக கொண்டாடிய திருவோண பண்டிகை

## "அத்தம் முதல் திருவோணம்" வரையிலான வரலாற்று சிறப்பு தொகுப்பு!

கேரள மாநிலத்தின் மிக முக்கிய பண்பாட்டு திரு விழாவான ஓணம் பண் டிகை உலகெங்கும் வாழும் மலையாளிகளால் ஆண்டதோறும் ஆவணி யில் விமரிசையாக கொண் டாடப்படுகிறது. தங்



களை ஆண்ட தாராள மனப்பான்மை கொண்ட மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்கும் விதமாக இந் நாள் அமையப்பெற்றுள் ளது. கேரளாவில் 'அத்தம்' நட்சத்திர நாளில் தொடங் கும் இந்த விழா, பத்தாம் நாளான 'திருவோணம்' வரை பத்து நாட்கள் தொடர்ச்சியாக கொண்டா டப்படுகிறது. இந்த பத்து நாட்களும் அங்குள்ள பள்ளி, கல்லூரிகள் மற் றும் அரசு அலுவலகங்க ளுக்கு அம்மாநில அரசு அதிகாரப்பூர்வ விடுமுறை அளித்து சிறப்பிக்கிறது.

அத்தம் நாளில் தொடங் கும் சிறிய பூக்கோலம் (அத்தப்பூ), ஒவ்வொரு நாளும் புதிய மலர்களால் விரிவடைந்து திருவோ ணத்தன்று பிரம்மாண்ட பூக்கோலமாக மலர்கிறது. மேலும், தும்பைப் பூ, காசித் தும்பை உள்ளிட்ட பாரம்பரிய மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, உப் பிலிட்டது முதல் பாயசம் வரை 26 வகை உணவுப் பதார்த்தங்களுடன் 'ஓண சத்யா' விருந்து படைக்கப் பட்டு, வள்ளம் களி (படகு போட்டி), புலிக்களி போன்ற பாரம்பரிய கலை களுடன் மலபார் பிராந்தியம் முழுவதும் திருவிழாக் கோலம் பூணு கிறது.

அந்த வகையில், மதுரை மாவட்டத்தில் வசிக்கும் தமிழ்நாடு வாழ் மலையா ளிகள் சார்பிலும் இன்று ஓணம் பண்டிகை மிகுந்த உற்சாகத்துடனும் பாரம்ப ரிய முறைப்படியும் கொண்டாடப்பட்டது. மதுரையில் வசிக்கும் கோபாலகிருஷ்ணன் நாயர்மற்றும்செல்லம்தம் பதியரின் இல்லத்தில் அவர்தம்குடும்பத்தினரும் உறவினர்களும் ஒன்றி ணைந்து இத்திருவி ழாவை கோலாகலமாக சிறப்பித்தனர். அதிகாலை யிலேயே வீட்டின் வாச லில் வண்ணவண்ணமலர் களால் அழகிய அத்தப்பூ கோலமிட்டு, மகாபலி சக் கரவர்த்தியை வரவேற் கும் வகையில் குத்துவிள க்கேற்றி வழிபாடுகள் நடத்தினர். தொடர்ந்து, பாரம்பரிய முறைப்படி வாழை இலையில் அடை பிரதமன் பாயசம், அவி யல், தோரன், எரிசேரி உள் ளிட்ட அறுசுவை உணவு கள் அடங்கிய 'ஓணசத்யா' விருந்தை கோபாலகிருஷ் ணன் நாயர் செல்லம் குடும்பத்தினர் தங்களது சுற்றத்தாருக்கு பரிமாறி மகிழ்ந்தனர். மதுரை மண் சார்ந்த மக்களுடனும் தங் களது பாரம்பரிய மகிழ்ச் சியை பகிர்ந்து கொண்ட இவர்களது ஓணம் கொண் டாட்டம், கலாச்சார நல்லி ணக்கத்திற்கும் சகோதரத் துவத்திற்கும் மிகச்சிறந்த சான்றாக அமைந்தது.

# சர்க்கரை விலையேற்றத்தால் தவிக்கும் பொது மக்கள்

## மானிய விலையில் சர்க்கரை வழங்கவும், விலை உயர்வை உடனடியாக கட்டுப்படுத்தவும் அரசுக்கு கோரிக்கை

சமீபகாலமாக சில்லறை விற்பனை சந்தையில் சர்க்க ரையின் விலை உயர்ந்து வருவதால் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சமூக வலைதளங்களில் சர்க்கரையின் விலை இரு மடங்கு உயர்ந்துள்ளதாக செய்திகள் பரவி வரும் நிலை யில், சந்தை நிலவரப்படி கடந்த மாதங்களில் சராசரியாக 48 ரூபாய்க்கு விற்கப்பட்ட சர்க்கரை,

தற்போது கடைகளின் தரம் மற்றும் பிராண்டை பொறுத்து 55 ரூபாய் முதல் 70 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவது உண்மைதான் என தெரியவருகிறது. முக்கிய கரும்பு உற்பத்தி மாநிலங்களான மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் பருவ மழை மாறுபாடு மற்றும் பூச்சி தாக்குதலால் கரும்பு விளைச்சல் பாதிக்கப்பட் டதே இந்த உற்பத்தி வீழ்ச் சிக்கு முதன்மை காரணமாக அமைந்துள்ளது.



மேலும் வரவிருக்கும் பண்டிகை கால தேவைகள் மற்றும் சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள சர்க்கரை பற் றாக்குறையும் இந்த விலை உயர்வுக்கு முக்கிய காரணங் களாக மாறியுள்ளன.மத்திய அரசு வியாபாரிகளுக்கான சர்க்கரை வரம்பை நிர்ணயித்தும்,


ஆலைகளில் நேரடி ஆய்வுகளை மேற்கொண்டிருந்தா லும், திறந்தவெளி சந்தையில் சாமானிய மக்களின் கைக்கு எட்டும் வகையில் விலை இன்னும் குறையவில்லை.

எனவே, சர்க்கரையின் செயற்கை பற்றாக்குறையை உருவாக்கி கருப்பு சந்தையில் ஈடுபடுவோர் மீது மத்திய மற்றும் மாநில அரசுகள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தற்காலிக நிவாரணமாக கூட் டுறவு அங்காடி மற்றும் ரேஷன் கடைகள் மூலம் மலிவு விலையில் கூடுதல் சர்க்கரை விநியோகம் செய்து மக்களின் சுமையைக் குறைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

# கொடைக்கானல் ஏரி சாலையில் தொடர் திருட்டு - இருவர் கைது

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கா னல் ஏரி சாலையில் உள்ள சாலையோர பெட்டிக்கடைகளில் தொடர் திருட்டில் ஈடுபட்டதாக இருவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரத் தைச் சேர்ந்த கார்த்திகேயன் (21), புதுச்சே ரியைச் சேர்ந்த சிவா (23) ஆகிய இருவ ரும் கொடைக்கானல் நாயுடுபுரம் பகுதியில் தனியார் ஓட்டலில் பணிபு ரிந்து வந்த நிலையில், ஏரி சாலையில் உள்ள 7 பெட்டிக்கடைகளின் பூட்டுகளை உடைத்து திருடியதை ஒப்புக்கொண்ட னர். அவர்களிடமிருந்து ரூ.1,150 ரொக் கம், ஐஸ்கிரீம், முட்டைகள், சோடா பாட் டில்கள், பிரெட், தின்பண்டங்கள், சன் கிளாஸ்கள், சமையல் எரிவாயு சிலிண்டர் உள்ளிட்ட பொருட்கள் மற்றும் திருட்டுக்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம், செல்போன் ஆகியவை பறிமு



தல் செய்யப்பட்டன.கொடைக்கா னல் காவல் ஆய்வாளர் புகழேந்தி, சார்பு ஆய் வாளர் சிவராஜா தலைமையிலான போலீ சார் விசாரணை மேற்கொண்டு இருவரை யும் கைது செய்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொ ள்ளப்பட்டு வருகிறது.

# இதர பிற்படுத்தப்பட்டோர், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான மத்திய அரசின் கல்வி உதவித்தொகை திட்டம்

ஒன்றிய அரசால் இதர பிற்படுத்தப்பட்டோர். பொருளாதாரத் தில் பின்தங்கியவர்கள். சீர்மரபினர் மாணவ மாணவியர்களுக்கு கல்வி உத வித்தொகை வழங்கும் வகையில் பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை திட் டம் (PM YASASVI Top class education in schools for OBC, EBC & DNT students) செயல்படுத் தப்பட்டு வருகிறது.

202627 ஆம் ஆண்டிற்கு தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (National Schoalrship Portal) அறிவிக்கப்பட் டுள்ள (Top Class School) சிறந்த செயல்பாடு கல்வி நிறுவனம் (100% தேர்ச்சி பெற்றுள்ள) பள்ளிகளில் நடப்பாண்டில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் தமிழ கத்தைச் சார்ந்த தகுதியான மாணவ மாணவியர்கள் கல்வி உதவித்தொகை (புதுப்பித் தல்/புதியது) திட்டத்தில் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (https://scholarships.gov.in) ஆட்சியர் தெரிவித் துள்ளார்.



இத்திட்டத்தில் கல்விக் கட்டணம் மற் றும் விடுதிக் கட்டணமாக ஆண்டொன் றுக்கு அதிகபட்சமாக 9 10 ஆம் வகுப்பு பயில்பவருக்கு ரூ.75,000/மற்றும் 11 12 ஆம்வகுப்புபயில்பவருக்குரூ.1,25,000/ வரை உதவித்தொகையாக ஒன்றிய அர சால் வழங்கப்படும். 30% மாணவியர்க ளுக்கு இத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

LDIT6001621 மாணவியர் இதர பிற்ப டுத்தப்பட்ட வகுப்பினர் (OBC), பொருளா தாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் (EBC) அல்லது சீர்மரபினர் (DNT) பிரிவைச் சேர்ந் தவராக இருத்தல் வேண்டும். வருமான வரம்பு: குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.250 இலட்சத்திற் குமிகாமல் இருக்க வேண்டும்.

> 202528 ஆம் கல்வியாண்டில் 100% தேர்ச்சி பெற்று தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் மத் திய அரசால் வெளியிடப்பட்டுள்ள பட்டி யலில் இடம்பெற்றுள்ள பள்ளிகளில் பயில்பவராக இருத்தல் வேண்டும்.

புதுப்பித்தல் (Renewal)

இத்திட்டத்தில் கடந்த நிதியாண்டில் (2025.26) கல்வி உதவித்தொகை பெற்று பயனடைந்த மாணவ மாணவியர்கள் நடப்பாண்டில் (202627) 10ஆம் வகுப்பு மற்றும், 12 ஆம் வகுப்பு விண்ணப்பித்தினை தேசிய கல்வி உத வித்தொகை இணையதளத்தில் உறுதி செய்து (National Schoalrship Portal (https://scholarships.gov.in) புதுப்பித்தல் (Renewal) கல்வி உதவித்தொகை படிவத்தை இணைப்பில் பூர்த்தி செய்து 3108.2026 க்குள் விண்ணப்பிக்குமாறு கேட் டுக்கொள்ளப்படுகிறு. இணையத்தில் பூர்த்தி செய் யப்பட்டுள்ள விண்ணப்பங்களை தத்தம் பள்ளி தலைமை ஆசிரியர் விண்ணப்பங்கள் சரிபார்ப்பதற்கான (புது பித்தல் For Renewal) கடைசி நாள் 15.09.2026

புதியது (Fresh: (202627) புதியதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11 ஆம் மாணவ/ மாணவியர்களுக்கு வகுப்புகளில் பயி லும் தகுதியுள்ள விண்ணப்பி ப்பதற்கான தேதி NSP இணையத்தில் அறிவிக் கப்படும்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கூடு தல் விபரங்கள் அறிந்திட National Scholar ship (https://scholarships.gov.in) அதிகாரம ளித்தல் துறையின் இணையதளத்தினை (http://socialjusticegov.in) அறிந்துக் கொள் ளலாம். தகுதியான மாணவ/மாணவியர் கள் இத்திட்டத்தில் விண்ணப்பித்து பய னடையுமாறு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் தெரி வித்துள்ளார்.

பழநி நகராட்சி பகுதிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான வீடுகள் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணி வரும் 30ம் தேதி வரை நடைபெற உள்ளது.
இதுவரை தங்கள் வீட்டிற்கு கணக்கெடுப்பாளர் வரவில்லை அல்லது தங்கள் வீடு கணக்கெடுப்பில் சேர்க்கப்படவில்லை என்றால் பொதுமக்கள் உடனடியாக தங்கள் வீடுகள் குறித்த விவரங்களை பழநி நகராட்சி அலுவலக அலைபேசி எண்கள் 9629269292, 7538805570 ல் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என நகராட்சி ஆணையாளர் ராஜ லட்சுமி தெரிவித்துள்ளார்.

# செங்குன்றம் போக்குவரத்து ஆய்வாளர் தலைமையில் நாள்தோறும் ஒவ்வொரு சந்திப்பில் போக்குவரத்து விழிப்புணர்வு

ஆவடி காவல் ஆணைய ரகத்திற்குட்பட்ட செங் குன்றம் போக்குவரத்து நிலையம் சார்பில் காவல் ஆய்வாளர் சந்திரமௌலி தலைமையில் செங்குன் றம் போக்குவரத்து எல் லைக்குட்பட்ட பகுதிக ளில் தினந்தோறும் கப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக செங்குன்றம் நெல் அரிசி மொத்த வியாபாரிகள் சங் கம் திருமண மண்டப சந்திப்பில் விழிப் புணர்வு நிகழ்ச்சி நடை பெற்றது. இந்த விழிப்புணர்வு நிகழ் வில் இரு சக்கர வாகனத்தில் பயணிப்போ ரிடம் ஹெல்மெட் அணி வதன்அவசியம்குறித்தும், சாலை விதிமுறைகளை பின்பற்றுவதனால் விபத் துகளை தவிர்க்கலாம் உள் ளிட்ட விழிப்பு உணர்வு களை ஏற்படுத்தினர்.

இதில் செங்குன்றம் போக்குவரத்து காவல் உத வியாளர்நரேஷ் உள்ளிட்ட போக்குவரத்து காவலர்கள் கைகளில் விழிப்பு உணர்வு வாசகங்கள் பொருந்திய பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத் தினர்.



ஒவ்வொரு சந்திப்பில் பொதுமக்களுக்கு போக்குவரத்து விழிப்புணர்வு குறித்து ஆலோசனைகளை வழங்

பௌர்ணமி பக்தர்கள் வருகையை முன்னிட்டு

# அருணாசலேஸ்வரர் கோயிலில் வசதிகள் மேம்பாடு பொது தரிசன வரிசையில் கூடுதல் வசதிகள்;

## செப்டம்பர் 1 முதல் கோயிலுக்குள் கைப்பேசிக்கு தடை

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சீ. ரமேஷ் இன்று ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் உடனிருந்தார்.

பௌர்ணமி நாட்களில் வெளிமாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருகைதருவதால், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்து அமைச்சர் அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்தினார். அப்போது, பக்தர்கள் பொதுத் தரிசன வரிசையில் நீண்ட நேரம் காத்திருப்பதை கருத்தில் கொண்டு, தரைவிரிப்புகள் அமைக்கவும், மேற்கூரையுடன் கூடிய நகரும் தடுப்புகளின் உயரத்தை அதிகரிக்கவும் அமைச்சர் அறிவுறுத்தினார். பொதுத் தரிசனம் மற்றும் சிறப்பு கட்டண தரிசன வரிசைகளில் கூடுதல் மின்விசிறிகளை பொருத்துவதுடன், அவற்றை முறையாக சுத்தம் செய்து பராமரிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். திருக்கோயிலில் பக்தர்கள் அதிகம் கூடும் பகுதிகளில் பூஜை மற்றும் அபிஷேக நேரங்கள் குறித்த தகவல் பதாகைகளை நிறுவ வேண்டும்.



பொதுத் தரிசனம் மற்றும்சிறப்புகட்டணதரிசன வரிசைகளில் பக்தர்களுக்கு வழிகாட்டும் வகையில் கூடுதல் எண்ணிக்கையில் வழிகாட்டி பதாகைகளை அமைக்க வேண்டும்என்றும்அமைச்சர் தெரிவித்தார்.

திருக்கோயிலுக்குள் பக்தர்கள்கைப்பேசிகொண்டு வருவதற்கு 01.09.2026 முதல் தடை விதிக்கப்பட உள்ளதால், இதுகுறித்த தகவல்களை செய்தித்தாள்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் தொலைக்காட்சி சேனல்கள், இணையதளங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்கு விரிவாக தெரிவிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பக்தர்களின் தரிசன வரிசையை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான அளவில் தன்னார்வலர்களை பயன்படுத்த வேண்டும். கோயில் வளாகத்தில் வைக்கப்படும் அறிவிப்புப் பலகைகளில் தமிழ் மொழி முதலிலும், ஆங்கிலம் இரண்டாவதாகவும், பிற மாநில மொழிகள் அதற்கடுத்ததாகவும்இடம் பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என அமைச்சர் உத்தரவிட்டார்.

கோயில் வளாகம் முழுவதும் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக கழிப்பறைகளை அவ்வப்போது சுத்தம் செய்து, பக்தர்களுக்கு சுகாதாரமான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

பக்தர்கள்விரைவாகவும் சிரமமின்றியும் தரிசனம் செய்யும் வகையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளருடன்ஆலோசனைசெய்து, தேவையான கூடுதல் காவல்துறையினரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அன்னதானக் கூடத்தில் உணவருந்திய பின்னர் வெளியேறும் பக்தர்கள் பயன்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள இரும்புக் கதவை திறந்து வைக்க வேண்டும். திருமஞ்சன கோபுரம் வழியாக வெளியேறும் பக்தர்களை மட்டும் அந்த வழியில் அனுமதிக்கும் வகையில் ஏற்பாடுகளை செய்ய வேண்டும்என்றும்அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பௌர்ணமி நாட்களில் அதிகளவில் பக்தர்கள் வருகை தரும் நிலையில், கூட்ட நெரிசலை தவிர்த்து பக்தர்கள் பாதுகாப்பாகவும் விரைவாகவும் தரிசனம் செய்யும் வகையில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என அமைச்சர் சீ. ரமேஷ் வலியுறுத்தினார்.

ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா. உதயகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் பிரகாஷ், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் இணை ஆணையர்பரணிதரன்உள்ளிட்ட இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.





# செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா சார்பில் மீலாதுன் நபி மாபெரும் ஊர்வலம்

மாதவரம் தொகுதி செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா சார்பில் நபிகள் நாயகம் (ஸல்) 1501ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மீலாதுன் நபி மாபெரும் ஊர்வலம் மஸ்ஜிதே ஆயிஷா தலைவர் டி. காஜா மொய்தீன் தலைமையில் நடைபெற்றது.

மஸ்ஜிதே ஆயிஷா தலைமை இமாம் முனைவர் மௌலவி ஏ.காஜா முயீனுத்தீன் ஜமாலி பிரார்த்தனையுடன் தொடங்கிய ஊர்வலம் மஸ்ஜிதே ஆயிஷாவில் தொடங்கி செங்குன்றம் பேரூராட்சிக்குட்பட்ட ஜி.என்.டி சாலை, திருவிக தெரு, தேவகி தெரு, வேணுகோபால் தெரு, வஉசி தெரு, அம்பேத்கர் தெரு, அண்ணா தெரு, மேட்டுத் தெரு, பிள்ளையார் கோவில்தெருஉள்ளிட்ட பல்வேறு தெருக்கள்வழியாக வண்டி மேடு பகுதிக்கு வந்தடைந்தது.

செயலாளர் எம்.அப்துல் லத்தீப், துணைத்தலைவர் ஹாபிழ் டி.அக்பர் பாஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஊர்வலத்தில் மஸ்ஜிதே ஆயிஷா நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இ.சேட்டு, என்.அப்துல் வாஹித், ஏ.ஷாநவாஸ், எம். சாகுல் அமீது, ஏ.கலீல் ரஹ்மான் உள்ளிட்ட மதரஸா மாணவ மாணவிகள், பொதுமக்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு நபிகளாரின் பொன்மொழிகள் பதாகைகளை ஏந்தியவாறு விழிப்பு உணர்வு ஏற்படுத்தினர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கலை பண்பாட்டுத்துறை சார்பில்,

# பள்ளி மாணவ, மாணவியர்களுக்கிடையே கலைப்போட்டிகள் 04.09.2026 அன்று நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தகவல்

தமிழ்நாடு அரசு, கலை பண்பாட்டுத் துறை, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் வாயிலாக 20252026 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் குரலிசை, பரதநாட்டியம், ஓவியம் மற்றும் கிராமிய நடனம் ஆகிய பிரிவுகளில் வருகின்ற 04.09.2026 அன்று ஆவடி சத்திய மூர்த்தி நகர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது. இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் 01.05.2025 அன்று 58 / 912 / 1316 ஆகிய வயதினை நிறைவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும். போட்டிக்கு வருகை புரியும் நாளன்று பெயர், வயது, முகவரி ஆகியவற்றிற்கான ஆதாரங்கள் கொண்டு வரவேண்டும். குரலிசை, பரதநாட்டியம், கிராமிய நடனம் பிரிவில் திரைப்படப் பாடல்கள் மற்றும் குழு நடனங்களுக்கு அனுமதியில்லை. குறைந்தபட்சம் 3 நிமிடங்கள் அதிகபட்சம் 5 நிமிடங்கள் வரை பாடுவதற்கும், நடனமாடுவதற்கும் அனுமதிக்கப்படும். நடனம் பிரிவில் முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும்.



ஓவியம் பிரிவில் 40x30 செ.மீ அளவுள்ள ஓவியத் தாள்களை பயன்படுத்த வேண்டும். ஓவியம் வரைய தேவையான பொருட்களை போட்டியாளர்களே கொண்டு வர வேண்டும்.

போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு பங்கேற்புக்கான சான்றிதழும், மாவட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படும். 912 / 1316 வயது பிரிவில் முதல் பரிசு பெறும் மாணாக்கர்கள் மாநில அளவிலான போட்டிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மேலும் விவரம் வேண்டுவோர் மண்டல உதவி இயக்குநர், கலை பண்பாட்டுத்துறை, காஞ்சிபுரம் – 631 502, தொலைபேசி எண்.04427269148 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். கலைத்திறன் மிக்க திருவள்ளூர் மாவட்ட மாணவ / மாணவியர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.





# புழல் எம்ஜிஆர் இலவச கணினி பயிற்சி மையத்தில் தேர்ச்சி பெற்ற 45 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்

மாதவரம் தொகுதி சென்னை அடுத்த புழல் ஆலமரம் பகுதியில் அமைந்துள்ள எம்ஜிஆர் கல்வி மற்றும் பொதுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் எம்ஜிஆர் இலவச கணினி பயிற்சி மையத்தில் தேர்ச்சி பெற்ற 45 மாணவ மாணவிகளுக்கு சான்றிதழும் புதிதாக சேர்ந்துள்ள மாணவமாணவிகளுக்கு சேர்க்கை அடையாள அட்டை வழங்கும் விழாவும் புழல் எம்ஜிஆர் மன்ற வளாகத்தில் நடைபெற்றது.

புழல் 24 வது வார்டு அதிமுக செயலாளர் எஸ். விஜயன் தலைமை தாங்கினார்.

மாதவரம் பகுதி அதிமுக செயலாளர் வேலாயுதம், வார்டு நிர்வாகிகள் பரமேஸ்வரன், அருள்மணி, செல்வம், விஜயலட்சுமி, ராவணன், கவிஞர் சித்திரவேல், சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பால்வளத்துறை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர்கிழக்குமாவட்ட அதிமுக செயலாளருமான மாதவரம் வி. மூர்த்தி சிறப்பு அழைப்பாளராககலந்துகொண்டு கணினி பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் புதிதாக சேர்ந்துள்ள 45 மாணவ மாணவிகளுக்கு சேர்க்கை அடையாள அட்டைகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் 23 வது வார்டு அதிமுக செயலாளர் இளங்கோவன், நரேந்திரன், மெட்ரோ தாஸ், செழியன், கணினி பயிற்சியாளர்கள் சந்தியா, அகிஷா கமலின் மற்றும் 24வதுவார்டுநிர்வாகிகள் மாணவ மாணவிகள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக வார்டு செயலாளர் விஜயனுக்கு கணினி பயிற்சி பெற்ற மாணவ மாணவிகள் சார்பில் நினைவு பரிசு வழங்கினர்.

# நேபாள பெருவெள்ளம்: உயிரிழப்பு 95 ஆக அதிகரிப்பு; 350+ பேர் மாயம் மீட்புப் பணிகள் தீவிரம்

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி நேபாள திபெத் எல்லைப் பகுதிகளில் இதுவரை 95 பேர் உயிரிழந்த நிலையில், 291 வெளிநாட்டவர் உள்பட 384 சுற்றுலாப் பயணிகளைக் காணவில்லை என்று நேபாள சுற்றுலாத் துறை தெரிவித்துள்ளது. இதில் 105 பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிட த்தக்கது. நேபாளத்தில் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நேபாளத்தில் இன்று காலை 8.30 மணியளவில் ரசுவா மாவட்டத்தில் போட்டே கோசி ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சற்றும் எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட இந்த திடீர் வெள்ளப் பெருக்கில் ஆற்றங்கரையோரத்திலிருந்த பல்வேறு கட்டிடங்கள், வாகனங்கள், ஆற்றின் குறுக்கே இருந்த பாலங்கள் அடித்துச் செல்லப் பட்டன. 95 பேர் உயிரிழப்பு என உறுதி செய்யப்பட்ட நிலையில், உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப் படுகிறது. இந்நிலையில், நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி பலர் உயிரிழந்த நிலையில், 291 வெளிநாட்டவர் உள்பட 384 சுற்றுலாப் பயணிகளைக் காணவில்லை என்று நேபாள சுற்றுலாத் துறை தெரிவித்துள்ளது. இதில் 105 பேர் இந்தியர்கள்.

மாயமான வெளிநாட்டவர்கள் இந்தியா, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, அமெரிக்கா, மலேசியா, பிரிட்டன், தென் ஆப்பிரிக்காவை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. தற்போதைய நிலவரப்படி 105 இந்தியர்களை காணவில்லை. இவர்கள் சாம்ராட் டூர்ஸ் அண்ட் டிராவல்ஸ், லீஃப் ஹாலிடே போன்ற சுற்றுலா ஏஜென்சிகள் மூலம் சென்றவர்கள் என்று தெரிகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேபாள அரசு மீட்புப் பணிகளைத் தொடங்கியுள்ளது. ஆனால், வெள்ள நீர் மட்டம் அதிகமாக உள்ள இடங்களில் ஹெலிகாப்டர்களால் தரையிறங்க முடியவில்லை.

இதற்கிடையில், சுற்றுலா பயணிகள் குறித்த விவரங்களை அறிய 1234 என்ற கட்டணமில்லை அவசர எண் 1144 என்ற ஹாட்லைன் எண், 98512 89445 என்ற சுற்றுலா காவல் துறை தொடர்பு எண் ஆகியனவற்றை நேபாள சுற்றுலாதுறை அறிவித்துள்ளது. தமிழர்கள் நிலவரம்:

நேபாளத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்கில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 சுற்றுலாப் பயணிகளின் நிலை குறித்த தகவல் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று அதிகாரிகள் இன்று தெரிவித்தனர். காணாமல் போனவர்களை விரைவாக மீட்கும் பணியில் மூத்த அரசு அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக முதல்வர் ஜோசப் விஜய் தெரிவித்தார்.



தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 57 சுற்றுலாப் பயணிகளில், 20 பேர் குறித்த விவரங்கள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளதாக அம்மாவட்ட ஆட்சியர் ரேவதி தெரிவித்தார். இதுகுறித்து பேசிய அவர், "20 பேர் குறித்த விவரங்கள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளது. மீதமுள்ளவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து தற்போது எங்களுக்குத் தெரியவில்லை; கூடுதல் தகவல்களுக்காகக்காத்திருக்கிறோம். அடையாளம்காணப்பட்ட 20 பேரில் 11 பேர் பெண்கள் என்று அதிகாரப்பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன" எனத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு தொலைபேசி எண்கள்: நேபாளத்தில் சிக்கித்தவிக்கும் தமிழர்கள் தொடர்பு கொள்ள உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பில், நேபாள வெள்ள பாதிப்பு தொடர்பாக தகவல்களைப் பெற தொலைபேசி எண்ணான 1800 309 3793 என்ற எண்ணைப் பயன்படுத்தலாம். வெளிநாட்டில் உள்ளவர்கள் மிஸ்டு கால் கொடுப்பதற்காக +91 80 6900 9900 என்ற எண்ணும், நேரடியாகப் பேசுவதற்காக +91 80 6900 9901 என்ற எண்ணும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லக் கட்டுப்பாட்டு அறையைத் தொடர்பு கொள்ள 92895 16712 என்ற கைபேசி எண்ணும் அறிவிக்கப்பட்டு, மீட்புப் பணிகள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்தியத் தூதரகம் அவசர எண்கள் அறிவிப்பு:

இதற்கிடையில், நேபாளத்தில் உள்ள இந்தியத் தூதரகம் அவசர எண்களை அறிவித்துள்ளது. +977 985 131 6807, +977 970 910 7500 ஆகிய எண்களில் தங்களின் உறவுகள் பற்றி விவரம் அறிய, தகவல் தெரிவிக்க தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

பிஹார் தலைமைச் செயலர் உத்தரவு:

கங்கையின் கிளை ஆறுகளான கோசி, கண்டக் ஆறுகள் நேபாளத்திலும், பிஹாரிலும் ஓடுகின்றன. அதனாலேயே இந்த ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பிஹாரிலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிஹாரில் தலைமைச் செயலர் பிரத்யாயா அம்ரித், காணொளிக் காட்சி மூலாம் கோசி, கண்டக் ஆறு பாயும் மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனைநடத்தியுள்ளார். நேபாளதிடீர்வெள்ளப்பெருக்கை கவனத்தில் கொண்டு ஆற்றங்கரையோரங்களில் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும், தேவைப்பட்டால் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியா உதவிக்கரம்: நேபாள திடீர் வெள்ளப் பெருக்கு தொடர்பாக நேபாள பிரதமர் பலேந்திரா ஷாவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்தத் துயர்மிகு நேரத்தில் மனிதாபிமான அடிப்படையில் அனைத்துவிதமான உதவிகளையும் இந்தியா செய்யும் என்று உறுதியளித்துள்ளார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA